Pastoral Letter No/GR/43/2020

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

## புனித வின்சென்ட் தே பவுல் சபை திருநாள்

**"செபமும் தவமும் உன்னை இறைவனிடம் அழைத்துச் செல்கிறது. ஆனால் நீ செய்கின்ற பிறரன்புப் பணிதான் இறைவனையே உன்னிடம் அழைத்து வருகிறது" என்னும் அன்னைத் தெரெசா**வின் அன்புமொழிக்கேற்ப பிறரன்புப் பணிபுரியும் பிறரன்புப் பணியாளர்கள் அனைவருக்கும் புனித வின்சென்ட் தே பவுல் மற்றும் ஓசானாம் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது திருச்சபையானது பிறரன்புப் பணியின் முன்மாதிரியான அன்னை மரியாவின் பிறப்புத் திருநாளையும் பிறரன்புப் பணியாளர்களின் பாதுகாவலர் புனித வின்சென்ட் தே பவுல் திருநாளையும், பிறரன்புப் பணியாளர்களின் சபை நிறுவனர் அருளாளர் பிரடரிக் ஓசானாம் திருநாளையும், முறையே செப்டம்பர் 8, 9 மற்றும் 27 ஆகிய நாட்களில் கொண்டாடி வருகிறது.

"**மின்னலை சிதறடிக்க மேகங்களை ஒன்று கூட்டுகின்ற இறைவன், அன்பைப் பரவச் செய்ய ஆன்மாக்களை ஒன்றுகூட்டுகிறார்"** என்னும் சீரியசிந்தனைக்குச் சொந்தக்காரரான ஓசானாம் தனது பிறந்த நாளாம் 1833 ஏப்பிரல் திங்கள் 23-ஆம் நாள், 19 முதல் 23 வயதுடைய 5 இளையோரையும் இணைத்து, வயது முதிர்ந்த இம்மானுவேல் பெய்லி என்பவரது தலைமையில் 7 உறுப்பினர்களைக் கொண்டு **'தருமசபை'** என்னும் பெயரில் ஒருபிறரன்புப் பணியாளர் அமைப்பை உருவாக்கினார்.

1581 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 24-ம் நாள் பிறந்து, 19 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்று, 1660 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 வரை வாழ்ந்து சுமார் 61 ஆண்டுகள் ஏழைகளுக்காகவே வாழ்வை அர்ப்பணித்த **'ஏழைகளின் பாதுகாவலர்'** என, இன்றும் போற்றப்படுபவரே புனித வின்சென்ட் தே பவுல். இவரது செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட ஓசானாம் தாங்கள் தொடங்கிய சபைக்கு **"புனித வின்சென்ட் தேபவுல் சபை"** என பெயர் மாற்றம் செய்தார். 1813 ஆம் ஆண்டு இத்தாலி மிலான் நகரில் பிறந்த ஓசானாமை இன்றளவும் மக்கள் நினைவில் கொண்டிருப்பதற்கான காரணம் அவரது பிறரன்புப் பணிதான். அவர் தொடங்கிய இச்சபையானது இன்று 139 நாடுகளில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கிளைச்சபைகளோடு சுமார் பத்து லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டு செயல்படுகிறது என்றால் பிறரன்புப் பணியாளர்களின் ஆர்வமும் இறை பராமரிப்பும் இச்சபையில் இருப்பதே ஆகும்.

**பிறரன்புப் பணியார்களின் தேவை:** கோவிட் 19 என்னும் கொடியநோயால் உலகமே அச்சத்துக்களாகியிருக்கும் இக்காலச் சூழலை நன்றாக நம்மால் உணரமுடிகிறது. இக்கொடிய நோயின் தாக்கத்தால் உலக மக்களில் பெரும்பாலானோர் உணவு, உடை, உறைவிடம் இன்றியும் கவனிப்பாரின்றியும், பொருளாதார நெருக்கடியிலும் சிறந்த மருத்துவம் பெற இயலாமலும் ஏன் இறந்தவர்களை அடக்கம் செய்யக் கூட ஆட்கள் முன்வராத அவலச் சூழ்நிலையில் இருப்போரையும் கண்கூடாகக் காணமுடிகிறது. அதுமட்டுமின்றி நாமும் வழக்கமான ஆலய வழிபாடுகளில் பங்கெடுக்க இயலாத, ஆன்மீகப் பசிகொண்டச் சூழலைசந்தித்து வருகிறோம். இப்போராட்டமான சூழ்நிலையிலிருந்து மக்களை பாதுகாத்து வெளிக்கொணர ஏராளமான தன்னார்வலர்கள் முன்வரவேண்டும். குறிப்பாக இச்சூழ்நிலையில் திறம்பட பணியாற்ற கடமையும், பொறுப்பும் அதிகம் உள்ளவர்களாக நான் வின்செந்தியர்களைக் காண்கிறேன்.

1996 இல் உருவான நமது மறைமாவட்டத்தின் **'வெள்ளிவிழா'** ஆண்டில் நாம் பயனம் செய்கிறோம். அதற்காக இரண்டாண்டு செயல் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருவதை நாம் அறிவோம். சமூக ஈடுபாடு என்னும் தலைப்பில் வின்செந்தியர்கள் செய்ய வேண்டிய ஒருசில செயல்பாடுகளிலும் பொது செயல்பாடுகளிலும் தங்களை அதிகம் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் எனவும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வின்செந்தியர்கள் முன்னெடுக்கும் காருண்யாநிதி, கல்வி உதவித் தொகைகள், ஆசாரிபள்ளம் நோயாளர் பராமரிப்பு இல்லக்

கட்டிடப்பணி, இயற்கையை பாதுகாக்க மரக்கன்றுகள் வழங்குதல், உணவுப் பொட்டலங்கள் வழங்குதல் போன்றவற்றை இன்னும் ஆர்வமுடன் செயல்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். குமரி மாவட்டத்தில் அதிகார பூர்வமாக புனித வின்சென்ட் தே பவுல் எனும் பெயரில் தொடங்கப்பட்ட முதல் கிளைச்சபை நமது மறைவட்ட ஆலயமான சூசைபுரத்தில் என்பதில் பெருமைகொள்வோம். 08.12.1963 இல் காலம் சென்ற அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளாரால் **'புனித சூசைப்பர்'** என்னும் பெயரில் முதல் கிளைச்சபை சூசைபுரத்தில் தொடங்கப்பட்டது. தற்பொழுது 91 கிளைச்சபைகளோடு இயங்கும் தக்கலை மத்தியப்பேரவை முன்னெடுக்கும் முயற்சிகளைப் பாராட்டுகிறேன். ஓசானாம் உயர்கல்வி நிலையம் வழியாக செயல்படும் பயிற்சித்திட்டங்கள், குறிப்பாக DBTech பயிற்சி, மறைமாவட்ட அளவில் செயல்படுத்தும் நலத்திட்டங்கள் ஆகியவற்றை பாராட்டுவதோடு, இவ்வாண்டு ஓசானாம் நிலையகட்டிட விரிவாக்கம், குருசடி, கட்டிடவர்ணம் பூசுதல், காருண்யாநிதியின் இலக்கை எட்டியது போன்றவற்றையும் பாராட்டுகிறேன். அதோடு ***'இறையோடுஒருநாள்' 'தேசத்தோடுஒருநாள்'*** செயல்பாடுகளையும் உறுப்பினர்களுக்கு வழங்கும் பயிற்சிகளையும் தொடர்ந்து செயல்படுத்திட ஆர்வம் காட்டவேண்டும்.

நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் மத்தியசபை காட்டும் ஆர்வம் வட்டாரசபை மற்றும் கிளைச்சபைகளிலும் வேரூன்றப்பட வேண்டும். அதற்கு ஒவ்வொரு வின்செந்திய உறுப்பினரும் தனிசெபத்திலும், குடும்பசெபத்திலும் குழு செபத்திலும் ஆர்வம் காட்டவேண்டும். கிளைச்சபைகளின் செயல்பாடுதான் ஒருசபையின் ஆணிவேர். ஆணிவேர் கெட்டுப்போன மரத்தால் வளரவே முடியாது. அதுபோல மேல்சபைகளின் வழிகாட்டுதலில் கிளைச்சபைகள் செயல்படவேண்டும். சபையின் அடிப்படைத் தன்மை மாறக்கூடாது. அதில் ஒவ்வொரு உறுப்பினரும் கவனம் செலுத்தவேண்டும். இது தனிநபர் அமைப்பல்ல; மாறாக குழுவாக செயல்பட அழைப்புப் பெற்றவர்களின் அமைப்பு.

கடந்த 6 ஆண்டுகள் சகோ. ஐயாத்துரை அவர்கள் தலைமையில் ஒரு குழு மத்தியச்சபையை சிறப்புடன் வழிநடத்தியது. ஏராளம் நற்செயல்கள் செய்தார்கள். அவர்களை இத்தருணத்தில் பாராட்டுகிறேன். அதுபோல 15.08.2020 முதல் சகோ. றாபி அவர்கள் தலைமையில் ஒரு குழு பொறுப்பெடுத்துள்ளது. அக்குழுவினரின் செயல்பாடுகளுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மறைமாவட்டத்தின் சார்பில் தெரிவிக்கிறேன். இத்திருநாள் வேளையில் என்னென்ன செயல்பாடுகளைச் செய்யலாம்

என பங்குத் தந்தையரோடு ஆலோசித்து முடிவு செய்திருப்பீர்கள் என எண்னுகிறேன். வரும் 27 அன்று வின்செந்தியர்கள் அனைவரும் முழுத்திருப்பலியில் குடும்பமாக ஆர்வமுடன் பங்கெடுக்க வேண்டும். அத்தோடு அன்றைய காணிக்கைப் பவனியிலும் பங்கெடுக்கவேண்டும். அன்றைய காணிக்கை வின்செந்திய செயல்பாடுகளுக்காக கொடுக்கப்படும். அதனை நல்ல முறையில் ஏழைகளுக்காக செலவிடுங்கள். மேலும் சிறப்புச் செயல்திட்டங்கள் தீட்டி செயல்படுத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்மறை கருத்துக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து; திருச்சபை எனக்கு என்ன செய்தது என்று மட்டும் எண்ணாமல் என்னால் திருச்சபைக்கும் திருச்சபை மக்களுக்கும் என்ன செய்ய இயலும் என எண்ணி ஆர்வமுடன் செயல்படுங்கள். பிறரன்புப் பணியில் ஆர்வமுடையோரை அதிகமாக கிளைச் சபைகளில் இணைத்துக் கொள்ளுங்கள். பங்குமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். மறைமாவட்டத்தின் ஒவ்வொரு செயல்பாடும் மக்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டே நடைபெறுகிறது. அதுபோல உங்கள் பணியும் அமையட்டும் என வாழ்த்துவதோடு, திராட்சை செடியாம் கிறிஸ்துவோடு இணைந்த கொடிகளாகப் பணியாற்றுவோம். அனைவருக்கும் ஒருமுறை கூட திருநாள் நல்வாழ்த்துக்கள்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்

17.09.2020

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

*குறிப்பு: இவ்* ஆயர் திருமுகத்தை செப்டம்பர் 20, 2020 ஞாயிறு *அனைத்து பங்குகளிலும்* திருப்பலியில் நற்செய்திக்குப்பின் மறையுரைக்குப் பதிலாக வாசிக்கவும்.